புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | மார்ச் 8, 2018 | புரட்சி 17 | முழக்கம் 08 | விலை: ரூ.3.00

## 2019 தேர்தலுக்காக மத வெறியைத் தூண்ட திட்டம்

# மீண்டும் ‘இராமராஜ்ய ரத யாத்திரை’

இந்தியாவில் ‘இராமராஜ்யம்’ அமைப்பதற்கும், அயோத்தியில் இராமன் கோயில் கட்டுவதற்கும் ‘சங்பரிவார்’, ‘இராமராஜ்ய யாத்திரை’ ஒன்றைத் துவக்கி இருக்கிறது. இது “அரசியல் யாத்திரையல்ல; ஆன்மிக பரப்புரை யாத்திரை” என்று அறிவித்துக் கொண்டு கடந்த பிப்.13ஆம் தேதி (மகாசிவராத்திரி நாள்) உ.பி. மாநிலம் அயோத்தியிலிருந்து புறப்பட்டுள்ளது.

41 நாட்கள் நடக்கும் இந்த யாத்திரை, 6 மாநிலங்களில் 6000 கிலோ மீட்டர் ‘இராமராஜ்ய’ பிரச்சாரம் செய்து மார்ச் 25 அன்று தமிழ்நாட்டில் இராமேஸ்வரத்தில் நிறைவடைகிறது. விசுவ இந்து பரிஷத் பொதுச் செயலாளர் சம்பத்ராய் என்பவர் தொடங்கி வைத்துப் பேசுகையில், “இந்த யாத்திரையை ஆர்.எஸ்.எஸ். விசுவ இந்து பரிஷத் ஒருங்கிணைக்கவில்லை” என்று ‘எங்கப்பா குதிருக்குள் இல்லை’ என்ற வகையில் பேசி இருக்கிறார். ‘ஸ்ரீ இராமதாச மிஷன் யுனிவர்சல் சொசைட்டி’ என்ற அமைப்பு இதை நடத்துகிறதாம். (கேரளா - மகாராட்டிரத்தில் மட்டும் செயல்படும் அமைப்பு இது)



தேர்தலை சந்திக்க விரும்பும் ம.பி.., கருநாடக மாநிலங்களில் இந்த ‘யாத்திரை’க் குழு பிரச்சாரம் செய்கிறது. இந்த யாத்திரையில் வரும் இரதம், அயோத்தியில் உருவாக்குவதற்காக திட்டமிடப் பட்டுள்ள ‘இராமன் கோயில்’ வடிவத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

இரத யாத்திரை புறப்பட்ட இடம் அயோத்தியிலுள்ள விசுவ இந்து பரிஷத் அமைத்துள்ள ‘இராமர் கோயில் பணிமனை’. 1990ஆம் ஆண்டு இந்தப் பணிமனையை விசுவ இந்து பரிஷத் தொடங்கி, இங்கே இராமன் கோயில் கட்டுமானப் பணிகளுக்கான கம்பி வேலைகள், கட்டுமான பொருள் சேகரிப்புப் பணிகள், சன்னல், கதவுகள் தயாரிக்கும் வேலைகள் 1993ஆம் ஆண்டிலிருந்து நடந்து வருகின்றன.

பள்ளிப் பாடத் திட்டத்தில் ‘இராமாயணம்’ குறித்த பாடத்தைச் சேர்க்க வேண்டும். ஞாயிற்றுக் கிழமைக்கு பதிலாக வியாழக்கிழமையை அரசு விடுமுறை நாளாக அறிவிக்க வேண்டும். மடாதிபதிகள், சாமியார்களைக் கலந்து ஆலோசித்து ‘இந்து தேசிய நாள்’ ஒன்றை மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் இந்த யாத்திரையில் வலியுறுத்தப்படுகிறது.

ஆர்.எஸ்.எஸ்.சுக்கும் இதற்கும் தொடர்பே இல்லை என்று அவர்கள் கூறினாலும், வழி நெடுக இந்த யாத்திரையில் அந்த அமைப்பினரே பங்கேற்று வருகிறார்கள். ஆர்.எஸ்.எஸ். உருவாக்கியுள்ள போலி இஸ்லாமிய அமைப்பான ‘முஸ்லிம் இராஷ்டிர மஞ்ச்’ என்ற அமைப்பின் பெயர் - இந்த யாத்திரையில் முன்னிலைப்படுத்தப்படுகிறது. பா.ஜ.க. முன்னணி தலைவர்கள் இந்த யாத்திரைக்கு வரவேற்புகளை அளித்து வருகின்றனர். மத்திய அமைச்சர் ரத்வி நிரஞ்சன் ஜோதி, நாடாளுமன்ற உறுப்பினர் லல்லுசிங், அயோத்தி மேயர் ரிஷிகேஷ் உபாத்யா ஆகியோர் யாத்திரையில் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று வரவேற்பு அளித்து வருகிறார்கள். இது ‘அரசியல் யாத்திரை அல்ல’ என்று சங்பரிவார் கூறுவது அப்பட்டமான பொய் என்பதை இந்த அரசியல் பிரமுகங்கள் பங்கேற்பு அம்பலப்படுத்தியிருக்கிறது.

1980ஆம் ஆண்டிலும், 1984, 1985, 1989ஆம் ஆண்டுகளிலும் இதேபோல் ஆர்.எஸ்.எஸ். தொடர்ந்து பல்வேறு யாத்திரிகைகளை இராமன் கோயிலுக்காக நடத்தியது. அப்போதும் அரசியல் யாத்திரை அல்ல. ஆன்மிக யாத்திரை என்றே கூறினர். இந்த யாத்திரைகள் மூலம்தான் கரசேவகர்கள் திரட்டப்பட்டனர். இப்போது நடப்பதும் அதே போன்ற சதிதான் என்று பைசாபாத்திலிருந்து ஜன்மோர்ச்சா என்ற பத்திரிகையை நடத்தி வரும் ஷீட்டல் சிங் கூறியுள்ளார்.

உ.பி. முதல்வர் ஆதித்யாநாத், பிரதமர் நரேந்திர மோடி ஆசியுடன் இந்த யாத்திரை நடக்கிறது. மோடி ஆட்சி இன்னும் ஒரு ஆண்டில் தேர்தலை சந்திக்க உள்ள சூழலில் இந்தியா முழுதும் இந்து, இந்து அல்லாதோர் என்ற அணி திரட்டலைத் தொடங்கி விட்டார்கள் என்பதே அயோத்தி மற்றும் பைசாபாத் பகுதியிலுள்ள பொது மக்களான இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் கூறுகிறார்கள்.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட நாளான டிசம்பர் 6 அன்று கடந்த 2017இல் சங்பரிவார் வெற்றி விழா நடத்தி, இராமன் கோயில் கட்டியே தீருவோம் என்று சபதமேற்று, தங்கள் ஆவேசத்தை வெளிப்படுத்தினர். அதன் தொடர் நிகழ்வுகள் உ.பி. அரசின் முழு ஆதரவோடு தொடங்கி நடந்து வருகின்றன. பாபர் மசூதி இடிப்பு வழக்கில் இஸ்லாமியர்களுக்கான நில உரிமை கோரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தவர் அஷீம் அன்சாரி. அவர் 2 ஆண்டுகளுக்கு முன் மரணமடைந்து விட்டார். அவரது மகன் இக்பால் அன்சாரி, “மசூதி இடிக்கப்பட்டபோது எனக்கு 20 வயது. சங்பரிவார்கள் அயோத்தியில் நடத்திய வெறியாட்டங்களை என்னால் மறக்கவே முடியாது. அச்சத்திலும் பதைபதைப்புகளிலும் நான் அதிர்ந்து போய் நின்ற தருணம் அது. கடந்த ஆண்டு டிசம்பர் 6 அன்று அவர்கள் நடத்திய வெற்றி விழா கொண்டாட்டங்கள், அதே போன்ற அச்சத்தையே எனக்கு ஏற்படுத்தியது. மற்றுமொரு இரத்தக் களறிக்கு தயாராகி வருகிறார்கள் என்ற சந்தேகம் எனக்கு வந்துவிட்டது” என்றார்.

1949ஆம் ஆண்டு ஒரு நள்ளிரவில் இராமன், சீதை, இலட்சுமணன் சிலைகளைக் கொண்டு வந்து சங்பரிவார் ஆட்கள் பாபர் மசூதிக்குள் போட்டு விட்டு, இராமன் சுயம்புவாகத் தோன்றியதாகப் பொய் சொல்லி வந்ததை 1949ஆம் ஆண்டு முதலே இடைவிடாது கூறி வந்தவர் ஹஷீம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அவர் மரணமடைந்த நிலையில் அவரது மகன் இக்பால் தொடர்ந்து பாபர் மசூதி நிலம் தொடர்பான வழக்கை அவரின் வாரிசுதாரராக இருந்து நடத்தி வருகிறார்.

**– தகவல்கள் ‘பிரன்ட் லைன்’ மார்ச் 16, 2018**

## முதுநிலை மருத்துவப் படிப்பில் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு இரத்து

### சமூக நீதிக்கு மற்றுமொரு பேரிடி

மருத்துவக் கல்வி விஷயத்தில் தொடர்ந்து சமூகநீதிக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் மத்திய அரசு, இப்போது ஓசையில்லாமல் இன்னொரு துரோகத்தை செய்திருக்கிறது.

நடப்பாண்டு முதுநிலை மருத்துவப் படிப்புக்கான மாணவர் சேர்க்கையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டை மத்திய அரசு கைவிட்டுள்ளது. இது மிக கடுமையாக கண்டிக்கத்தக்கது.

நாடாளுமன்றத்தில் கடந்த 2006-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட மத்திய கல்வி நிறுவனங்கள்(மாணவர் சேர்க்கையில் இட ஒதுக்கீடு) சட்டத்தின்படி அனைத்து மத்திய உயர்கல்வி நிறுவனங்களிலும் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. மருத்துவப் படிப்பைப் பொறுத்தவரை மத்திய அரசின் மருத்துவக் கல்வி நிறுவனங்களில் மட்டுமின்றி, மாநில அரசுகளுக்கு சொந்தமான மருத்துவக் கல்லூரிகளில் அகில இந்திய தொகுப்புக்கு ஒதுக்கப்படும் இடங்களுக்கும் இந்த ஒதுக்கீடு பொருந்தும். ஆனால், நடப்பாண்டில் அகில இந்திய தொகுப்புக்கான இடங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு எந்த அறிவிப்பும் இல்லாமல் நீக்கப்பட்டுள்ளது.

இந்தியா முழுவதும் முதுநிலை மருத்துவப் படிப்புக்கு 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்கள் உள்ளன. இவற்றில் 50% அகில இந்திய தொகுப்புக்கு வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் 8000க்கும் மேற்பட்ட இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றை நிரப்பும் போது பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27%, பட்டியலினத்தவருக்கு 15%, பழங்குடியினருக்கு 7.5% என மொத்தம் 49.5% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், பட்டியலினத்தவருக்கும், பழங்குடியினருக்கும் இட ஒதுக்கீடு வழங்கிய மத்திய அரசு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மட்டும் இட ஒதுக்கீட்டை மறுத்துள்ளது. இதனால், பிற பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சார்ந்த 2160 மாணவர்களுக்கு கிடைத்திருக்க வேண்டிய முதுநிலை மருத்துவக் கல்வி வாய்ப்பு பறிக்கப்பட்டுள்ளது. இது மிகப்பெரிய சதி; சமூக அநீதியாகும்.

மத்திய அரசின் மருத்துவக் கல்வி நிறுவனங்களுக்கான மாணவர் சேர்க்கையில் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டிருக்கிறது. இளநிலை மருத்துவப் படிப்புக்கான மாணவர் சேர்க்கையில் மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் மட்டுமின்றி, அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களிலும் 27% ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கும் போது அகில இந்திய ஒதுக்கீட்டுக்கான முதுநிலை மருத்துவப் படிப்பில் மட்டும் 27% இட ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டுள்ளது.

# பார்ப்பன அதிகார வர்க்கத்தின் வங்கி ஊழல் கொள்ளை

பஞ்சாப் தேசிய வங்கியின் நிர்வாக இயக்குனர் உஷா ஆனந்த சுப்ரமணியம் என்ற பார்ப்பனப் பெண் அதிகாரியும், அய்.சி.அய்.சி. வங்கி நிர்வாக இயக்குனர் என்.எஸ். கண்ணன் என்ற பார்ப்பனரும் இப்போது சி.பி.அய். விசாரணை வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள். திருமதி உஷா அனந்த சுப்ரமணியம் இப்போது அலகாபாத் வங்கியின் நிர்வாக இயக்குனர் தேசிய மய வங்கிகளின் தலைமைப் பொறுப்பிலுள்ள பார்ப்பன அதிகாரிகள், தொழிலதிபர் களுக்கு வழங்கிய கடன்கள் குறித்து ஆய்வு செய்ய நிதியமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

தேசிய மயமாக்கப்பட்ட வங்கி களில் பொது மேலாளர் - நிர்வாக இயக்குனர் போன்ற உயர்பதவிகளில் 99 சதவீதம் பேர் பார்ப்பனர்கள் ஒரு சதவீதம் பேர்கூட பிற்படுத்தப் பட்டவரோ, தாழ்த்தப்பட்டவரோ இல்லை என்று 2017 ஜனவரியில் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல் கூறுகிறது.

மற்றொரு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் வெளிக் காணரப்பட்டுள்ள ஒரு தரவின்படி, 2017 மார்ச் 31உடன் முடியும் கடந்த ஐந்தாண்டுகளில், 8,670 வழக்குகளில் 612.6 பில்லியன் (61ஆயிரத்து 260 கோடி) ரூபாய் அளவிற்கு 'கடன் மோசடி' நடைபெற்றிருக்கிறது. நீரவ் மோடியும், மொகுல் சோக்சியும் பாஜகவின் தலைவர்கள் சிலருக்கு மிகவும் வேண்டியவர்கள். இந்த அரசாங்கத்தால் மிகவும் பயனடைந்து வரும் அனில் அம்பானிக்கும் இவர்கள் மிகவும் வேண்டியவர்கள்.

இந்திய வங்கித்துறையின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு பஞ்சாப் நேஷனல் வங்கியில் மிகப்பெரும்அளவில் மோசடி நடந்திருக்கிறது. இந்தியாவின் பணக்காரர்கள் வரிசையில் 85ஆவது நபராக இருக்கக்கூடியபேர்வழியான நீரவ் மோடியும் அவரது மாமா மெகுல் சோக்சி என்பவரும் வங்கி பார்ப்பன அதிகாரிகளுடன் கூட்டுச்சதி செய்து, பலமுறை போலி புரிந்துணர்வு கடிதங்களைப் பெற்று 11 ஆயிரத்து 400 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிப் பணத்தை மோசடியாகக் கையாடல் செய்திருக்கின்றனர். 2011ஆம் ஆண்டிலேயே துவங்கிய இவர்களின் மோசடி, இப்போது 2017இல் மோடியின் ஆட்சியில் உச்சத்திற்கு வந்திருக்கிறது.

நீரவ் மோடியும், அவரது குடும்பத்தினரும் மத்தியக் குற்றப் புலனாய்வுக் கழகத்தால் சிபிஐ விசாரணை மேற்கொள்வதற்கு முன்பாகவே, ஜனவரி முதல் வாரத்திலேயே, நாட்டை விட்டு மிகவும் பாதுகாப்பாக வெளியேறி விட்டார்கள். இதே போன்று தான் லலித்மோடி மற்றும் விஜய் மல்லையா ஆகியோரின் வழக்குகளிலும் நடைபெற்றன. **நாட்டைவிட்டு வெளியேறியுள்ள நீரவ் மோடி, சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள டாவோஸ் நகரில் நடைபெற்ற உலகப் பொருளாதார உச்சிமாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் மோடியுடனும் இதர இந்திய வர்த்தகப் பிரமுகர்களுடனும் சேர்ந்து நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டுள்ளார்.** பஞ்சாப் நேஷனல் வங்கி ஊழல் என்பது அதோடு முடிந்து விடவில்லை. அது பல வங்கிகளில் நடைபெற்றுள்ள ஊழல்களையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்திருக்கிறது. பாரத ஸ்டேட் வங்கி, யூனியன் வங்கி, அலகாபாத்வங்கி மற்றும் ஆக்சிஸ் வங்கி ஆகியவற்றில் நடைபெற்றுள்ள ஊழல்களையும் இது வெளிச்சத்திற்குக் கொண்டுவந்துள்ளது.

வங்கிகள் சமீப காலத்தில் மேற்கொண்ட அதிவேகமான தாராளமய நடவடிக்கைகளால் முறைகேடான முதலீடுகளை ஏற்பதற்கும், அவை வழக்கமாக மேற்கொள்ளும் கண்டிப்பான விதிமுறைகளை கைகழுவுவதற்கும் இட்டுச் சென்றன. பஞ்சாப் நேஷனல் வங்கியில் நடைபெற்றுள்ளது போலவே பல வங்கிகளிலும் ஊழல்கள் நடைபெற்றிருப்பதற்கு, அடிப்படையான காரணம் ஆட்சியாளர்கள் பின்பற்றும் தாராளமயப் பொருளாதாரக் கொள்கைகள் என்று மட்டும் கூறிவிட முடியாது. நவீன தாராளமயக் கொள்கையைத் தூக்கிப் பிடித்திடும் பேர்வழிகள் இப்போது தங்களுக்கு கடன்கள் வழங்கிய தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளையும், பொதுத் துறை வங்கிகளையும் சீர்குலைக்கத் துடிக்கிறார்கள். பொதுத் துறை வங்கிகளைத் தனியாரிடம் தாரை வார்த்திட வேண்டும் என்றும் குரல் எழுப்பத் துவங்கியுள்ளனர். தலைமை பொருளாதார ஆலோசகர் பார்ப்பனர் அரவிந்த் சுப்பிரமணியம், வங்கிகளில் ஊழல் நடைபெறுவதைத் தவிர்த்திட, அவற்றின்மீது தனியாரின் பங்களிப்பினைஅதிகரித்திட வேண்டும் என்று திருவாய் மலர்ந்திருக்கிறார்.

இந்திய ரிசர்வ் வங்கியின் கீழ் இயங்கும் ஆய்வுப் பிரிவும் (இன்ஸ்பெக்ஷன் டிபார்ட் மெண்ட்) இதுகுறித்து வாயைத் திறக்காமல் மவுனம் சாதிக்கிறது. வங்கிகளும், வங்கியல்லாத நிதி நிறுவனங்களும் சுயமாகவே சான்றிதழ்கள் கொடுப்பது அனுமதிக்கப்பட்டன. இவை அவ்வப்போது ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்று விதி இருந்தாலும் எந்த ஆய்வும் நடப்பதில்லை. பார்ப்பன அதிகார முறைகேடுகள் நாட்டையே திவாலாக்கி வருகின்றன.

கடந்த காலங்களில் தனியாரிடம் இருந்த வணிக வங்கிகளின் செயல்பாடுகள் குறித்தும் தெரிந்துகொள்ள வேண்டும். சுதந்திரம் பெற்றபின் 1969 வரை செயல்பட்டுவந்த 559 தனியார் வணிக வங்கிகள் தகர்ந்து தரைமட்டமாகின. இதன் காரணமாக அவற்றில் முதலீடு செய்திருந்த சேமிப்பாளர்கள் நிலை அதோ கதியானது. வங்கிகள் தேசிய மயமாக்கப் பட்டபின்னர், மிகவும் பரிதாபகரமான முறையில் தோல்வியைச் சந்தித்த 25 தனியார் வங்கிகள், பொதுத்துறை வங்கிகளுடன் இணைக்கப்பட்டு, காப்பாற்றப்பட்டன. இதில், "புதிய தலைமுறை தனியார் வங்கி" என்று கூறப்பட்ட தி குளோபல் டிரஸ்ட் வங்கியும் அடக்கம்.

## புதுச்சேரி பெரியார் சிந்தனையாளர் இயக்கம் கழக ஏட்டுக்கு 50 சந்தாக்களை வழங்கியது

புதுச்சேரியில் செயல்பட்டு வரும் பெரியார் சிந்தனையாளர் இயக்கம் சார்பில் அதன் அமைப்பாளர் தீனதயாளன், 50 புரட்சிப் பெரியார் முழக்கத்துக்கான சந்தாக்களை கழகப் பொதுச் செயலாளரிடம் இயக்கம் சார்பில் அளித்தார். 24.2.2018 அன்று பெரியார்-அம்பேத்கர்-சிங்காரவேலனார் நினைவு நாள் பொதுக் கூட்டம், பேரணி புதுச்சேரியில் எழுச்சியுடன் நடந்தது. பேரணி முடிந்து 'சுதேசி மில் வாயில்' (பேருந்து நிலையம் அருகே) பொதுக் கூட்டம், லெனின் சுப்பையா மற்றும் மக்கள் மன்ற கலை நிகழ்ச்சிகளுடன் நடந்தது. பல்வேறு இயக்கங்களைச் சார்ந்தவர்கள் உரையாற்றினர். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்புரையாற்றினார்.

# நீட்டை இரத்து செய்ய உலகத் தமிழ் அமைப்பு வலியுறுத்தல்

உலக நாடுகளில் வாழும் தமிழர்களின் உலகத் தமிழ் அமைப்பு நீட் தேர்வை இரத்து செய்ய வலியுறுத்தியுள்ளது. மார்ச் 4ஆம் தேதி செய்தியாளர்களிடம் அமைப்பு சார்பில் பேசிய அதன் தலைவர் முனைவர் வை.க. தேவ்டென்னசி நீட் தேர்வு முறையினால் உருவாகும் பாதிப்புகளை விளக்கினார். நீதியரசர் அரி. பரந்தாமன் பேசுகையில், "ஆந்திராவில் நீட்டை நீக்கக் கோரி அம்மாநில அரசே முழு நாள் அடைப்பு நடத்தியதையும், அதைத் தொடர்ந்து, ஆந்திர முதல்வர் சந்திரபாபுவை மோடியும், அமித்ஷாவும் பேச்சு நடத்த அழைத்துள்ளதையும் சுட்டிக் காட்டி தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏன் சோம்பிக் கிடக்கிறார்கள்? அவையில் கொந்தளித்திருக்க வேண்டாமா" என்று கேட்டார்.

கழக சார்பில் தென்சென்னை மாவட்ட செயலாளர் இரா. உமாபதி கலந்து கொண்டார். தமிழக வாழ்வுரிமை கட்சி நிறுவனர் வேல் முருகன், தியாகு, மருத்துவர் ரவிந்திரநாத் உள்ளிட்ட பல்வேறு அமைப்பினர் பங்கேற்றனர்.

## சட்டக் கல்லூரி மாணவர் போராட்டம்: கழகம் ஆதரவு



காஞ்சிபுரம் - திருவள்ளூரில் புதிய சட்டக் கல்லூரி திறப்பதை காரணம் காட்டி 126 ஆண்டு காலம் பாரம்பரிய மிக்க சென்னை பிராட்வே பகுதியில் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியை மூடுவதற்கு முயற்சிக்கும் அரசைக் கண்டித்து சட்டக் கல்லூரி மாணவர்கள் கடந்த ஒரு வாரமாக உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சட்டக் கல்லூரி மாணவர்களின் இந்த உள்ளிருப்பு போராட்டத்திற்கு 03.03.2018 காலை திராவிடர் விடுதலைக் கழகத்தின் தென்சென்னை மாவட்டச் செயலாளர் இராஉமாபதி, வழக்கறிஞர் திருமூர்த்தி மற்றும் தமிழ்நாடு மாணவர் கழக மாநில அமைப்பாளர் பாரி சிவா ஆகியோர் நேரில் சென்று மாணவர்களின் போராட்டத்திற்கு கழக ஆதரவை தெரிவித்தனர்.

## தலைமைக் கழகத்தில் 'நிமிர்வோம்' வாசகர் வட்டம் கூடியது



திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் 04.03.2018 மாலை 6 மணிக்கு "நிமிர்வோம்" வாசகர் வட்ட சந்திப்பு கலந்துரையாடல் கூட்டம் இரா.உமாபதி (தென் சென்னை மாவட்டச் செயலாளர்) தலைமையில் நடைபெற்றது. பெரியார் யுவராஜ் ஒருங்கிணைத்தார்.

'நிமிர்வோம்' ஏப்ரல் மற்றும் மே மாத இதழ்களைப் பற்றிய தங்களுடைய கருத்துகளை தோழர்கள் ஜெயபிரகாஷ், எட்வின் பிரபாகரன், ராஜீ, சங்கீதா, ரவிபாரதி ஆகியோர் விரிவாக எடுத்துரைத்தனர். ஒவ்வொரு தோழரும் ஒரு கட்டுரையை மய்யப் பொருளாக எடுத்துக் கொண்டு அதன் உள்ளடக்கத்தோடு தங்கள் கருத்துகளையும் இணைத்து சிறப்பாக உரையாற்றினர்.

கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் "திராவிடம் தமிழ்த் தேசியம்" என்ற தலைப்பில் விரிவாகப் பேசினார். தோழர்களின் கேள்விகளுக்கு தெளிவான பதில்களை வழங்கி சிறப்புரையாற்றினார்.

## மார்ச் 18இல் கோவையில் பாரூக் நினைவு நாள் குருதிக் கொடை - கருத்தரங்கு



16.03.2018 அன்று இஸ்லாமிய மத அடிப்படை வாதிகளால் படுகொலை செய்யப்பட்ட பாரூக் முதலாமாண்டு நிகழ்வுகள் 18.03.2018 அன்று நடைபெறுகிறது

கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும், பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், முன்னிலையிலும் நினைவேந்தல் நிகழ்வு நடைபெறுகிறது.

முதல் நிகழ்வாக மனிதநேயன் பாரூக் குருதிக் கொடை முகாம் நிகழ்கிறது. முகாமை இரசீதா பாரூக் துவக்கி வைக்கிறார். அன்று மாலை 4 மணியளவில் 'வரலாற்றில் மதங்களின் வன்முறைகள்' என்கிற கருத்தரங்கம் நடைபெறுகிறது.

நம் இரத்தத்தில் ஜாதி மத பேதமில்லை; ஏற்ற தாழ்வு இழிவுமில்லை; உயர்தவன் தாழ்ந்தவன் எண்ணமில்லை.

அனைவரும் வருக

குருதிக் கொடை முன்பதிவுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்: 9677404315

முகாம் நடைபெறும் இடம்: அண்ணாமலை அரங்கம்; நாள் - 18.03.2018 காலை 8:30 மணி முதல்; அனைவருக்கும் சான்றிதழ் உடனே வழங்கப்படும்.

**ஏற்பாடு : திராவிடர் விடுதலைக் கழகம், கோவைமாவட்டம்.**

# ‘சுப்ரபாதம்’ எப்படி யாரால் வந்தது?

*‘ஆண்டாள் முதல் சங்கராச்சாரி வரை... தமிழை மறுக்கும் வேதமரபுகள்’ என்ற தலைப்பில் ஜன.30, 2018 அன்று சென்னை இராயப்பேட்டை ஆனந்த் அரங்கில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய கருத்தரங்கில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிகழ்த்திய உரையிலிருந்து... (கடந்த வார தொடர்ச்சி)*

வைதீக மரபு என்ற பார்ப்பன மரபு தமிழை எப்படி ஊடுருவி அழித்தது என்பதற்கு ஒரு சான்றாக ‘நாலாயிர திவ்ய பிரபந்தத்தை’ சுட்டிக் காட்ட முடியும். தமிழ் ஆழ்வார்களால் பாடப்பட்ட நான்காயிரம் பக்திப் பாடல்களின் தொகுப்பு இது. திவ்யம் என்றால் ‘தூய்மை’ என்று பொருள். ப்ரபந்தம் என்றால் ‘திரட்டு’ என்பது பொருள். ‘ஆழ்வார்களின் நாலாயிர அருளிச் செயல்’ என்பதுதான் இந்த நூலுக்கான தமிழ்ப் பெயர். ஆனால் இது ‘நாலாயிர திவ்ய பிரபந்தம்’ என்ற சமஸ்கிருதப் பெயருக்கு மாற்றப்பட்டது. இன்று வரை ‘நாலாயிர திவ்ய பிரபந்தம்’ என்ற சமஸ்கிருத பெயரையே தமிழில் எழுதப்பட்ட நான்காயிரம் பாடல் தொகுப்பும் தாங்கி நிற்கிறது.

இது குறித்து, அக்னிஹோத்திரம் இராமானுஜ தாத்தாச்சாரியாரே விரிவாக விளக்கியிருக்கிறார். தாத்தாச்சாரியார் இறந்துபோன மூத்த சங்கராச்சாரியான சந்திசேகரேந்திர சரசுவதியின் நம்பிக்கைக்குரியவர். அவரின் உதவியாளராக இருந்தவர்; நெருக்கமாகப் பழகியவர்; வாழ்வின் இறுதிக் கட்டத்தில் மனம் திறந்து பார்ப்பனர்கள் வேதத்தை வடமொழியை சூழ்ச்சியாக எப்படிப் பயன்படுத்தினார்கள் என்ற உண்மையைப் பதிவு செய்துவிட்டு இறந்தார்.

வேதம் - தமிழர்களிடையே கோயில்களில் எப்படி ஊடுருவியது என்பதை தாத்தாச்சாரி விளக்கியிருப்பதை அப்படியே படித்துக் காட்டுகிறேன்.

“அந்த காலத்தில்.... வேதம் தமிழ் தேசத்தையே ஆக்கிரமித்தது.... எங்கும் வேதம்... எதிலும் வேதம் அதாவது இங்கே உள்ள சிலைகள், நுட்பமான சிற்பங்களை பார்த்த பிராமணர்கள்...

“இந்த சிலைக்கு ஏன் வெறும் பூ போட்டுக் கொண்டிருக்கிறீர்கள் ? இந்த சிலையில் வேதம் சொன்ன தேவதைகளை நாங்கள் வர வைத்துக் காட்டுகிறோம்.

அவர்கள் கண்ணுக்கு தெரியாத தேவதைகள், அஸரீரிகளாக இருப்பார்கள். அவர்களின் காதில் விழுமாறு வேத மந்த்ரங்களை நாம் உரத்து உச்சரித்தால் இந்த சிலைக்குள் எங்கள் வேதத்தின் தேவதை வரும்...” என்றார்கள்.

தமிழன் முதலில் சிலைக்கு பூ தான் போட்டுக் கொண்டிருந்தான். இதுதான் தமிழர் வழிபாடு என்று முன்பே நான் சொல்லியிருந்தேன்.

நம்மாழ்வாரின் திருவாய்மொழி (2940) தமிழ்ச் செய்யுளைப் பாருங்கள்.

அதாவது... இறைவனிடம் தனது எண்ணத்தை தெரிவிக்கும்படி... நாரைகள், அன்னங்கள், குயில்கள், மகன்றில்கள் (மரங்கொத்தி இனத்தைச் சேர்ந்த வளைந்த மூக்குடைய கடற்கரை பறவை), சிறிய குருகுகள் (கொக்குகள்), வரி வண்டுகள், இளங் கிளிகள், நாகணவாய் பறவைகள் ஆகியவற்றிடம் தூது செல்ல கேட்டுக் கொண்டே வரும் ஆழ்வார் பாடல்கள்.

அடுத்து தூதாய் அனுப்ப பனிக்காற்றை தேர்ந்தெடுக்கிறார். வாடைக் காற்று வீசும் வேளையில்... அவ்வாடையிடம் வேண்டுகோள் வைக்கிறார்.

அந்த பனிக்காற்று இன்றும் வீசிக் கொண்டிருக் கிறது. இந்த பாடல் மூலம் நமக்கு அந்த காற்று என்ன சொல்கிறது ?

“பூக்களைப் பறித்து தினமும் பூ செய் பூசை செய்வது தான் தமிழர் பண்பாடு” என்று சொல்கிறது.

இந்தப் பண்பாட்டில்தான் குறுக்கே வந்தார்கள் பிராமணர்கள்.

‘முதலில் நீ பூ போட்டுக் கொண்டே இரு... நான் வேதம் சொல்கிறேன்...’ என்று வெளியே நின்றார்கள்.

காரணம்... நீ பகவான் பக்கத்தில் நின்று ஏதாவது சொன்னால், அவன் மேல் எச்சில் தெறிக்கும். அதனால் நீ பூ போட்டபடியே இரு. நான் சத்தம் போட்டபடியே இருக்கிறேன்.”

இவருக்குப் பெயர் அத்யயன பட்டர்.

கொஞ்ச நாள் ஆனது. அத்யயன பட்டரே உள்ளே வந்து விட்டார். உள்ளே என்றால் ? கர்ப்ப கிரகத்துக்குள்.

இனி நான் பார்த்துக் கொள்கிறேன்; நீ வெளி வேலைகளைப் பார்.

அடுத்து ஆகமக்காரர்களின் ஆதிக்கம். அவர்கள் முழு முதல் சமஸ்கிருதக்காரர்கள் ஆனதால்.

தமிழன் வெளியே நிறுத்தப்பட்டான். சமஸ் கிருதர்கள் உள்ளே சென்றார்கள். தமிழ்ப் பூக்களைத் தூவி சமஸ்கிருத அர்ச்சனை நடத்தினார்கள்” - என்கிறார் தாத்தாச்சாரி

பூவை கடவுளுக்கு, பக்தர்கள் நேரடியாகச் சொரிந்து வழிபாடு நடத்துவதே தமிழர் மரபாக இருந்த காரணத்தால் தான் அதற்கு ‘பூசை’ என்றே பெயர் வந்தது என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். ஆனால் தமிழரின் வழிபாட்டு மரபை வேத மரபு கைப்பற்றி தமிழையும் தமிழர்களையும் சூழ்ச்சிகரமாக அடிமைப்படுத்தியதோடு, அதுவே புனிதமான வழிபாட்டு முறை என்று தமிழர்களின் பொதுப் புத்தியிலும் திணித்தார்கள். இதை பெரியார்தான் கேள்விக்கு உட்படுத்தினார்.

கர்ப்பகிரகத்துக்குள் பூசை செய்யும் உரிமை பார்ப்பனர்களுக்கு மட்டுமே உண்டு என்பதும், அதன் மூலம் ஏனைய பார்ப்பனரல்லாத மக்கள் கர்ப்பகிரகத்துக்குள் ‘தீண்டப்படாதவர்களாக’ சூத்திரர்களாக்கப்படுவதையும் கேள்விகேட்டதோடு, போராட்டக் களமும் அமைத்தவர் பெரியார். ஆனால் பெரியார், தமிழருக்கும் தமிழுக்கும் துரோகம் இழைத்தவர் என்று பார்ப்பனர்களும் பேசுகிறார்கள். “தூய தமிழர்கள் நாங்கள்தான்; அதற்கான குருதிச் சான்றிதழ் எங்களிடம் இருக்கிறது” என்று கூறிக் கொண்டிருப்பவர்களும் பார்ப்பனர்களோடு சேர்ந்து கொண்டு பெரியாரை தமிழர் எதிரி; தமிழ் எதிரி என்று வாய்க் கூசாமல் பேசுகிறார்கள்.

அதேபோல இப்போது கோயில்களில் சுப்ரபாதம் என்ற பாடல் பாடப்படுகிறது. சில தமிழ் தொலைக்காட்சிகள்கூட ஒவ்வொரு நாளும் இந்த ‘சுப்ர பாதப் பாடல்களோடு’ நிகழ்ச்சிகளைத் தொடங்குகின்றன. ‘சுப்ரபாதம்’ என்பது தமிழ்ச் சொல்லா ? இல்லை. அது சமஸ்கிருதச் சொல். ‘இப்பொழுது நற்பொழுதாகட்டும்’ என்பது அதன் அர்த்தம். விடியற்காலைப் பொழுதில் ஒலிபெருக்கிப் போட்டு ஒலிக்கிறார்களே, இது எப்படி வந்தது ? ‘சுப்ரபாதத்துக்கு’600 ஆண்டுகளுக்கு முன்பே தமிழில், ‘திருப்பள்ளியெழுச்சி’ என்கிற பாடலை, தொண்டரடிப் பொடியாழ்வார் எழுதியிருக்கிறார். கடவுளைக்கூட தூக்கத்திலிருந்து எழுப்பி, அவரை வேலை செய்ய வைக்க வேண்டியிருக்கிறது, பாருங்கள் !

‘திருப்பள்ளியெழுச்சியை’ ஒழித்துவிட்டு ‘சுப்ரபாதம்’ நுழைந்த வரலாற்றை இராமானுஜ தாத்தாச்சாரியே விளக்குகிறார். அவர் மொழியிலேயே நாம் கேட்போம்:

“சுப்ரபாதம் என்றால் என்ன அர்த்தம் ? இது ஒரு வடமொழிப் பெயர். அதாவது இப்பொழுது நற்பொழுதாகட்டும் என்று அர்த்தம். இன்னும் உங்களுக்கு மாடர்ன் ஆக சொல்ல வேண்டுமென்றால் கடவுளுக்கு காலை வணக்கம் செலுத்தி அவரை எழுப்புவதுதான் சுப்ரபாதம். கடவுள் தூங்கலாமா ? என்பது வேறு விஷயம் !

அதாவது, “Good morning to God and wake up him...”

இந்த சுப்ரபாதத்தை இயற்றியவர் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா. (மத விஷயங்களில் தன்னோடு வாதம் பண்ண வருபவர்கள் யாராக இருந்தாலும், தன்னுடைய பயங்கரமான பிரதிவாதம் மூலம் அவர்களை தோற்கடித்து விடுவார் அண்ணா. அதனால்தான் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா என பெயர் பெற்றார்) இவர் மணவாள மாமுனிகளின் சிஷ்யர்.

‘ஆழ்வார்கள் வாழி அருளிச் செயல் வாழி’ என்று வாழ்த்தினாரே அதே மணவாள மாமுனிகளின் சிஷ்யர்தான் அண்ணா.

“கௌசல்யா சுப்ரஜா ராமா
பூர்வா சந்த்யா ப்ரவத்ததது...”

என்ற சுப்ரபாதத்தின் இந்த முதல் வரிகள் வால்மீகி இராமாயணத் திலிருந்து உருவப்பட்டது. அதாவது... விஸ்வாமித்ரர் இராமனை எழுப்புகிறார். “கௌசல்யை புண்ணியம் செய்து பெற்ற ராமா... அங்கே காட்டுப் பக்கம் அரக்கர்கள் அடாவடி செய்து தவ முனிவர்களுக்கு இடைஞ்சல் செய்கிறார்கள். நீ வந்து அவர்களை வீழ்த்து...” என இராமனை எழுப்பி அழைக்கிறார் விஸ்வாமித்ரர்.

இதை முதல் வரியாகப் போட்டு, வெங்கடேச சுப்ரபாதத்தை இயற்றியிருக்கிறார் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா. இவர் இந்த சுப்ரபாதத்தை 14ஆம் நூற்றாண்டில் இயற்றினார் என்கிறார்கள்.

ஆனால்... இதே போன்ற சுப்ரபாத வடிவத்தை நாம் இப்போது கேட்கிற சுப்ரபாதம் இயற்றப்பட்டதற்கு அறுநூறு வருஷங்கள் முன்னதாகவே அற்புதமாக இயற்றியிருக்கிறார் தொண்டரடிப் பொடியாழ்வார் தமிழில்.

இனிய தமிழில் ‘திருப்பள்ளியெழுச்சி’ என்றும் பெயர் கொண்ட அந்த பத்து முத்தான பாடல்களை (ஆழ்வார்கள் அருளிச் செயல் புத்தகத்தில் 917 முதல் 926 வரையிலான பாடல்கள்) சிலவற்றை மட்டும் உங்களுக்கு சொல்கிறேன்.

தொண்டரடிப் பொடியாழ்வார் காவேரிக் கரையில் படுத்திருக்கும் திருவரங்க பெருமாள் அரங்கநாதனை எழுப்புவதாக இந்தப் பாடல்களை இயற்றியிருக்கிறார்.

கதிரவன் கிழக்கின் மேலே முளைத்து விட்டான். இரவின் இருள் அகன்றது. காலைப் பொழுது மலர்கள் பூத்து தேன் சொரிகின்றன. வானத்து தேவர்களும், பூமியின் மன்னர்களும், பக்த கோடிகளும் நீ பார்க்க தெற்குப் பக்கம் திரண்டிருக்கிறார்கள்.

அவர்கள் வந்த யானைத் திரள்கள் எழுப்பும் பிளிற்று ஓசையும்.. யானைப் படையின் முரசு ஒலியும் எல்லா திசைகளிலும் எதிரொலிக்கிறதே அரங்கா... திருப்பள்ளியை விட்டு எழுக, அவர்களுக்கு காட்சி தருக...”

இன்னும் ஒரு தமிழ் திருப்பள்ளியெழுச்சி கேளுங்கள்.

சுற்றிலும் காவிரி நதி சூழ்ந்த அரங்கா, கடலிலே கதிரவன் தோன்ற... குளங்களில் தாமரைப் பூக்கள் சிரித்து மலர்ந்து மணக்கின்றன.

சின்னச் சின்ன இடுப்புகளைபெற்ற பெண்கள் காவிரியில் குளித்து... தங்களின் நனைந்த கூந்தலை ஈரப்பதம் இல்லாமல் உலர்த்தி உதறி... தத்தம் ஆடைகளை உடுத்தி கரையேறுகிறார்கள்.

இப்படிப்பட்ட இளங்காலைப் பொழுதில் தொண்டரடிப் பொடியென்னும் நான் திருத்துழாய் (துளசி) மாலையும், பூக்குடலையும் தாங்கி காத்திருக் கிறேன். இந்த அன்பனை ஏற்ற அருளி ஆளாக்க வேண்டும்.

இந்த தமிழ்பாடலுக்கு என்ன குறைச்சல் ?” என்று கேட்கிறார் தாத்தாச்சாரி.

வால்மீகி இராமாயணத்திலிருந்து வரிகளைத் திருடி யிருக்கிறார், ‘வேத விற்பன்னர்’ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சியார். திருப்பதி ஏழுமலையானை தூக்ககத்திலிருந்து எழுப்ப உருவாக்கப்பட்ட பாடல், இப்போது கிராமங்களில்கூட உழைக்கும் மக்களை தூங்கவிடாமல் அதிகாலை நேரங்களில் ஒலிபெருக்கியில் அலறிக் கொண்டிருக்கிறது.

திருவரங்கத்திலுள்ள ரெங்கநாதனுக்கு திருப்பள்ளி யெழுச்சிப் பாடுவதற்குக்கூட அர்த்தம் உண்டு. ஏழுமலையானுக்கு ஏன் சுப்ரபாதம் என்ற பகுத்தறிவு கேள்வியையும் தாத்தாச்சாரி கேட்கிறார். அவர் கூறுகிறார்:

“சுப்ரபாதத்தில் இன்னொரு லாஜிக்கும் இருக்ககிறது. அதிலும் தமிழ்தான் வெற்றி பெறுகிறது. திருப்பதி வெங்கடாஜலபதி நின்று கொண்டிருக்கிறார். அவரை எழுப்புவது சரியாக இருக்குமா ? இங்கே திருவரங்கத்தில் அரங்கன் படுத்துக் கொண்டிருக் கிறார். இவரை எழுப்புவது சரியாக இருக்குமா ? படுத்துக் கொண்டிருப்பவரை எழுப்பும் வேலையை தமிழில் செய்தார் - தொண்டரடிப் பொடியாழ்வார். நின்று கொண்டிருப்பவரை எழுப்பும் வேலையை சமஸ்கிருதத்தில் செய்தார் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா”

- என்று நறுக்கென்று ‘குட்டு’கிறார் தாத்தாச்சாரி. இதே கேள்வியை நாம் கேட்டால், ‘இந்து விரோதி’, ‘தேச விரோதி’ என்று ஒரு கூட்டம் கிளம்பும். கேட்பது தாத்தாச்சாரி. இதற்கு என்ன பதில் கூறப் போகிறீர்கள் ?

இதிலே இன்னொரு செய்தியையும் சுட்டிக்காட்ட வேண்டும். வைணவக் கோயில்களில் வைகுண்ட ஏகாதசியின்போது ஆழ்வார்கள் எழுதிய தமிழ்ப் பாடலான ‘நாலாயிர திவ்ய பிரபஞ்சத்தை’ அதாவது நாலாயிரம் அருளிச் செயலை இருபது நாட்கள் ‘ஏதாதசி’க்கு முன்பும் பின்பும் பாடுவதை ஒரு வழக்கமாக வைத்திருக்கிறார்கள். ஆனால் கோயில் கர்ப்பகிரகத்துக்குள் பாடுவது இல்லை. ஸ்ரீரங்கத்தில் படுத்த நிலையில் உள்ள ரெங்கநாதன் மூல விக்ரகத்தை அப்படியே கர்ப்பகிரகத்துக்குள் வைத்துவிட்டு வீதி உலாக்களுக்காக உருவாக்கப்பட்ட ‘உற்சவ மூர்த்தி’ விக்ரகத்தை கோயிலுக்கு வெளியே ஒரு மண்டபத்தில் தூக்கிக் கொண்டு வைத்து, அங்கேதான் தமிழ்ப் பாடல்களைப் பாடுவார்கள். பாடல் பாடி முடிந்த பிறகு மீண்டும் உற்சவ மூர்த்தியை உள்ளே தூக்கிக் கொண்டு போய்விடுவார்கள். இதற்கு ‘அரயர் சேவை’ என்று பெயர். இப்படி ஒரு ‘அவமானம்’, ‘அவமதிப்பு’ தமிழுக்கு தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது.

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கழகத் தோழர்கள் நேரில் ஆய்வு

# விழுப்புரம் வெள்ளம்புத்தூரில் நடந்தது என்ன?

விழுப்புரம் மாவட்டம் திருகோயிலூர் போகும் வழியில் அரகண்டநல்லூரை அடுத்து உள்ள வலதுபுரத்தில் வெள்ளம் புத்தூர் கிராமம், விழுப்புரத்திலிருந்து 56 கிமீ தூரத்தில் உள்ளது .அங்கே தலித் மக்கள் 130 குடும்பங்கள் உள்ளனர். வன்னியர் சமூகம் நாயக்கர் இதர பிற்படுத்தப்பட்ட சமூகம் மற்றும் மலைவாழ் நரிக் குறவர்கள் 300 குடும்பங்கள் வசிக் கிறார்கள்.

சம்பவம் 21-02-2018 அன்று ஏழுமலை (மறைவு) மனைவி ஆராயி அவர் மகன்கள் பாண்டிதுரை வயது 26, சரத்குமார் வயது 22, விஜி வயது 19, இவர்கள் மூவரும் பெங்களூரில் வேலை செய்து வந்தனர்.

அஞ்சலட்சி வயது 17 திருப்பூரில் வேலைசெய்து வந்தவருக்கு 23-02-18 அன்றுதான் தகவல் தெரிவித்துள்ளனர். தனம் 13 எட்டாம் வகுப்பு படிக்கிறார். சமயன் வயது 9 நான்காம் வகுப்பு.

அன்று இரவு ஆராயி தனம் சமயன் கடுமையாக தாக்கப்பட்டு வியாழன் விடியற்காலை 22-02-18 அன்று பக்கத்து வீட்டில் உள்ள தனம் உடன்படித்த சிறுமி கதவை திறந்து பார்த்து பயந்து பக்கத்தில் உள்ளவர்களிடம் சொல்லி மற்றவர்கள் பார்த்துள்ளனர். பிறகு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளனர். தனம் சிறுமியை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதாக மருத்துவமனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் எப்படி நடந்தது என்று புரியாதவர்களாக அனைவரும் சொல் கிறார்கள். இந்த சம்பவத்தை கேள்விப் பட்டவுடன் அப்பகுதியை சேர்ந்த தலித் அல்லாத மக்கள் அனைவரும் திரண்டு வந்து பார்த்து இப்படி நடந்துவிட்டதே என்று வேதனைப்பட்டதாக சொல் கிறார்கள் தலித் மக்கள். அங்குள்ள தலித் மக்களுக்கும் வன்னியர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் எந்த பிரச்சனையும் வந்ததில்லை என்கிறார்கள்.

இதுபோன்ற மர்மமான முறையில் அப்பகுதி நரிக்குறவர் பெண் மீதும் வன்னியர் சமூக பெண்மீதும் இதுபோன்ற தாக்குல்கள் நடத்தி பாலியல் வன்முறை நடந்ததாக சொல்கிறார்கள் .

ஆராயி குடும்பம் அவர் கணவர் ஏழுமலை உயிருடன் இருக்கும்போது 8 , 9 ஆண்டுகளுக்கும் முன் அவர்கள் வைத்திருந்த 14 சென்ட் நிலத்தை அவர்கள் வீட்டிற்கு எதிரில் உள்ள நிலத்துக்காரார் தேவனூரை சேர்ந்த வன்னியர் சமூகம் ராஜேந்திரனிடம் விற்று நான்கு சென்ட் எங்களுக்கு மாற்று இடம் வேண்டும் என்று கேட்டுக் கொண் டார்கள். ஆனால் அதற்கான பத்திரமோ ஆதாரத்தையோ ஆராயி குடும்பத்தார் வைத்திருக்கவில்லை. வாய்பேச்சாக கூறி வந்துள்ளார். இவை இப்படி இருக்க ராஜேந்திரன் வயது 55. ஆராயிடம் பலமுறை தவறாக நடக்க முயன்றுள்ளார். ஆராயி அவரை திட்டியுள்ளார். அவருடைய சிறிய மகள் தனத்திற்கு சோப்பு ஷேம்புகள் வாங்கி கொடுத்துள்ளார். மேலும் ஒருமுறை ஆராயி மருமகளிடம் மகாலட்சுமி வழியில் சந்தித்து செல்போன் நெம்பரை கேட் டுள்ளார். அப்போது அவரை திட்டியுள்ளார். ஆராயி மகள் அஞ்ச லட்சுமியிடம் வீட்டிற்கு உள்ளே வந்து தண்ணீர் கேட்டுள்ளார் . ஆராயின் பக்கத்து வீட்டு பெண்ணிடமும் தவறாக நடக்க முயற்சித்துள்ளார்.

ஆனால் இவர்தான் வந்தாரா ? அந்த சம்பவத்தில் தொடர்புடையவரா ? என்பதை யாரும் சொல்ல மறுக்கிறார்கள். அவர் செல்வாக்கான நபர் என்று சொல்லி அச்சப்படுகிறார்கள். மூன்று பேரையும் இந்த தனி நபர் அப்படி செய்திருப்பாரா என்று தெரியவில்லை. அரகண்ட நல்லூர் காவல்நிலையத்திற்கு சென்று திராவிடர் விடுதலைக் கழகத்திலிருந்து வருகிறோம் என்றோம். உதவி ஆய்வாளர் சிவக் குமாரிடம் கேட்டபோது தலித் இளைஞர் களை நான்கு பேரை நான்கு நாட்களாக வைத்து விசாரித்து வருகின்றனர். ஆனால் அவர்கள் அப்பாவிகள் என்று சொன்னோம். அவர்களை நாளைக்கு விட்டு விடுகிறோம் என்றார்கள்.

ராஜேந்திரனை ஏன் இதுவரை நீங்கள் அழைத்து வந்து விசாரிக்கவில்லை என்றோம். அவருக்கு இதில் தொடர்பில்லை என்றார். ஏற்கனவே அவர் அந்த குடும்பத்து பெண்களிடம் தவறாக நடக்க முயற்சித் துள்ளார் என்றோம். நான் அவரை மீண்டும் அழைத்து விசாரிக்கிறேன் என்றார். ஆய்வாளர் எங்கே என்று கேட்டோம். வெளியில் சென்றுள்ளார் என்றார் டிஎஸ்பி. இந்த சம்பவம் நடந்த பகுதிக்கு வந்தாரா என்றோம். இல்லை மோடி வருகைக்கு போய்விட்டார், இனிமேல்தான் செல்ல இருக்கிறார் என்றார்கள்.

மற்றபடி குற்றவாளிகள் குறித்து நேரடியான நபர்கள் யார் என்று அடையாளம் காணமுடியாததாக உள்ளது என்றார். இன்று மாலை 4 மணியளவில் சமயன் உடல் அடக்கம்செய்யப்பட்டது. தனம் ஆராயி ஜிப்மர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளனர். அந்த பகுதி இளைஞர்கள் போதிய அரசியல் படுத்தப்படாதவர்களாகவே உள்ளனர். இப்போது தான் முதல் தலைமுறை கல்லூரி சென்று படித்து வருகிறார்கள்; தெரு விளக்கு எரியாத நிலையிலே இருந்துள்ளது; அதனாலே அன்றைக்கு யார் வந்தார்கள் என்று தெரியவில்லை என்கின்றனர். அண்மையில் இந்த சம்பவத்திற்குப் பிறகு தெருவிளக்கை பொருத்தியுள்ளனர் .

மிகக் கொடுரமாக நடந்த இந்த வன் முறை நடத்தியவர்களை வன்கொடுமை சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும். விசாரணையை சி.பி.அய்க்கு மாற்ற வேண்டும். மருத்துவமனையில் இருப்ப வருக்கு உயரிய சிகிகிச்சையை தமிழக அரசு வழங்க வேண்டும். காவல்துறையும் மாவட்ட நிர்வாகமும் அந்த பகுதி மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

திராவிடர் விடுதலைக் கழக விழுப்புரம் கிழக்கு மாவட்ட தலைவர் பூ.ஆ.இளை யரசன் மற்றும் விஜி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி புதுச்சேரி ஆகியோர் 25.02.18 அன்று மதியம் 2 மணியவில் இருந்து மாலை 6 மணி வரை அங்கிருந்து சமயனின் உடல் இறுதி அடக்கம் முடித்து விட்டு அந்த குடும்பத்தாருக்கு ஆறுதல் சொல்லிவிட்டு வந்துள்ளனர்.

---

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

சரி; சைவத்தின் கதை என்ன ? சிவனை தென்னாட்டுக் கடவுளா க்கினார்கள்.

“தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவருக்கும் இறைவா போற்றி”

என்று சிவன் தென்னாட்டுக்காரன். தமிழ்க் கடவுள். ஆனால், பரந்த மனப் பான்மையோடு ‘தேசிய ஒருமைப்பபாடு’ கருதி எல்லா நாடுகளுக்கும் அருள் செய்வான் என்று கூறினார்கள்.

இன்றைய வேதாரண்யம் அன்றைய திருமறைக்காட்டிலுள்ள சிவன் கோயிலை வேத புரோகிதர்கள் வேதங்கள் ஓதி. பூஜித்து கதவை வேத சக்தியால் திறக்கவே முடியாமல் செய்து விட்டார்களாம். சிவ பக்தர்கள் ஏங்கித் தவித்தபோது, சைவ மதப் பரப்புரையாளர்களான திருஞான சம்பந்தனும், திருநாவுக்கரசரும் கதவைத் திறக்க முடிவு செய்து, கோயிலுக்குப் போனார்களாம். திருநாவுக்கரசர், கோயில் கதவுக்கு முன்னால் போய் நின்று, வேத மொழியால், உனது கதவை மூடி களங்கப்படுத்தி விட்டார்களே; உன்னைக் காண வந்திருக்கிறேன், கதவைத் திற என்ற பொருளில் பதிகம் பாடினாராம்.

“பண்ணினேர் மொழியாள் உமைபங்கரோ
மண்ணினார் வலஞ் செய்ம்மறை காடரோ
கண்ணினால் உமைக் காணக் கதவினை
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே”

- நாவுக்கரசரின் இந்தப் பாட்டுக்குப் பிறகும் கதவு திறக்கவில்லையாம். பிறகு இரண்டாவது ஒரு பதிகம் பாடுகிறார். இரக்கம் காட்டாமல் கதவைத் திறக்க மறுக்கிறீர்களே என்ற பொருளில்,

“அரக்கனை விரலால் அடர்த்திட்ட நீர்
இரக்க மொன்றிலீர் எம்பெருமானரே”

என்று பாடிய பிறகு கதவு திறந்ததாம்.

கருநாடகம் தடுத்து வைத்திருக்கிற காவிரி நீரை - கருநாடக அணைகளின் மதகுகளைத் திறந்து விட்டு தமிழகத்துக்கு தண்ணீர் கொண்டுவர சம்பந்தரும், திருநாவுக்கரசர் பதிகம் பாட இல்லாமல் போய் விட்டார்களே என்று கேட்டு விடாதீர்கள். இப்படித்தான் இருக்கும் பக்தி இலக்கியம். சரி; கதவு திறந்தாகிவிட்டது. பிறகு, இரவு கதவை மூட வேண்டுமே; அதற்கு ஞானசம்பந்தன், ‘சதுர மறைதான்’ என்று பதிகம் பாடினானாம். கதவு மூடியது. அன்றி லிருந்துதான் அந்தக் கோயிலின் கதவு - திறந்து சாத்தும் முறையே வந்தது என்கிறார்கள்.

கதைகள் இருக்கட்டும்; வேத புரோகிதர்கள் மந்திரம் ஓதி பூட்டிய கோயில் கதவை தமிழ்ப் பதிகம் பாடி திறந்து வைத்தார்கள் என்பதுதான் இதில் அடங்கியுள்ள கருத்து. இப்போது என்ன நடக்கிறது ? சிவாச்சாரியார் சமஸ் கிருதத்தில் தான் பூஜை நடத்துகிறார்.

திருவாசகம், திருவிசைப்பா, பெரிய புராணம் போன்றதமிழ் பக்திப் பாடல்களைப் பாடுவதற்கு ‘ஓதுவார்கள்’ என்று ‘சூத்திரர்கள்’ இருக்கிறார்கள். தமிழ்ப் பாடல்கள் சிவன் காதுகளில் விழுந்து விடக் கூடாது என்று வெளியே ஓரமாக நின்றுதான் இவர்கள் பாடுகிறார்கள். இதுதான் தமிழன் நிலை !

(தொடரும்)

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 9841489896
newsdvk@gmail.com

## நாகை மாவட்டக் கழகத் தலைவர் மகாலிங்கம் துணைவியார் படத்திறப்பு



திராவிடர் விடுதலைக் கழகத்தின் நாகை மாவட்ட தலைவர் ம.மகாலிங்கம் துணைவியார் ம.சுந்தராம்பாள் 7.10.2017 அன்று சனிக்கிழமை காலை 9 மணி யளவில் முடிவெய்தினார். அவருடைய உடல் மறுநாள் 08.10.17 அன்று எந்த வித மூட சடங்குகளுமின்றி எரியூட்டப்பட்டது. தன்னுடைய கண்களை கொடையாக வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அவருடைய படத்திறத்திறப்பு நிகழ்வில் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு படத்தை திறந்து வைத்து உரையாற்றினார்.

## ‘நிமிர்வோம்’ – பிப்ரவரி 2018 இதழ்




- ‘ஆண்டாள்’, ‘தேவதாசி மரபு’ குறித்து ஆய்வுக் கட்டுரைகள்
- நேர்மையின் சிகரம் ஓமந்தூரார்.
- தமிழ் நாட்டைப் புறக்கணிக்கும் நடுவண் ஆட்சி
- டார்வின் கோட்பாடு; மத்திய அமைச்சருக்கு அறிவியல் மறுப்பு.
- திருமூலரை எதிர்க்காத பார்ப்பனர்கள் வள்ளலாரை எதிர்ப்பது ஏன்?
- சிறுபான்மை ஜாதிகளை விலக்கி வைக்கும் ‘ஜனநாயகம்’.
- சுயமரியாதைத் திருமணம் பற்றி அண்ணா.
- புரட்சிக் கவிஞர் நாடகம் குறித்து பெரியார்.

மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...
தனி இதழ் விலை : ரூ.20
தொடர்புக்கு : நிர்வாகி, 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.
தொலைபேசி எண்: 044 24980745/7299230363 www.dvkperiyar.com/nimirvomdvk@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 8th March 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN